[1981 பிப்ரவரி 27

[முற்பகல் 10–10]

திரு. த. மாரிமுத்து : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து வறட்சியாக இருப்பதனால் இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த அரசு ஆவன செய்யும்.

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில் உள்ள குலமங்கலம் வெள்ளான் ஆற்றில் ஒரு சிறு அணை கட்டுவதாக 10 ஆண்டு காலமாக எஸ்டிமேட் போட்டு திரும்பத் திரும்ப ரிவைஸ்டு எஸ்டிமேட் போடுகின்றார்கள். அதனால் இன்னும் அந்தத் திட்டம் அமலாகாமல் இருக்கின்றது. அதை அரசு கவனித்து இந்த ஆண்டாவது துரிதமாக நடவடிக்கை எடுத்து முடிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, கேரளாவில் இருந்து மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரை, வறட்சிப் பகுதியான இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்குக் கிடைக்கும் வகையில் பேச்சுவார்த்தையை, நமது அமைச்சர் கேரள மாநில முதல் அமைச்சருடன் நடத்தினார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காட்டாறுக்கும், கேரள மாநிலத்துக்கும் சம்பந்தம் இல்லை.

அம்மாப்பட்டியருகே பாலாற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 295—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்கா, துவரங்குறிச்சி பிர்கா, லக்காநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அம்மாபட்டியருகே வரும் பாலாற்றின் குறுக்கே விவசாய நீர்ப்பாசனத்திற்காக ஒரு அணை கட்டும் திட்டம் உண்டா ?

TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 27]

(ஆ) அத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவுகளின் தொகை எவ்வளவு ?

(இ) அத் திட்டம் எப்போது அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) (ஆ), மற்றும் (இ): பத்து ஆண்டுகள் நீர் அளவைகள் எடுக்கதிட்டமிட்டு 1977 முதல் நீர் அளவைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும், இன்னும் ஏழு ஆண்டுகளுக்கு நீர் அளவைகள் எடுத்து, ஆய்வின் முடிவில், உபரி நீர் இருப்பதாகத் தெரிந்தால், இத்திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும் எனவும், தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவர் அவர்களே, இத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 7 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசு இது பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவர் அவர்களே, 7 ஆண்டுகள் என்பது மிகவும் நீண்ட காலமாக இருக்கிறது. எனவே அதை விரைவாக செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அதற்கு முன்பாக நீர் அளவைகள் எடுத்து முடிவுக்கு வர இயலாத காரணத்தினால், அதற்கு இன்னும் 7 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செம்மறிக்குளம் கிராமத்தில் படுகை நிலங்கள்.

* **வினா எண். 296—திரு. சி. கேசவ ஆதித்தன் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

திருச்செந்தூர் தொகுதி செம்மறிகுளம் கிராமம் படுகையில் எப்பொழுதும் நீர் வற்றாமல் இருப்பதால் அதிலே பயிர் செய்யும் விவசாயிகளுக்கு அந்த நீரை வற்றவைத்து விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : செம்மறிக்குளம் படுகை நிலங்களுக்கு வடிகால் வசதி அளிக்க மூன்று திட்டங்கள் தனித்தனியாக ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டன. ஆயினும் அவை பொருளாதார ரீதியில் பயன்